★ விலை ரூபா 1:00

தீபாவளி மலிவு
விற்பனை!
★ காஞ்சிபுரம்-மணிப்புரி
★ வூலி-G 44 ★ பட்டுவேட்டி
★ சேட்டிங் ★ சூட்டிங்-பேபி சூட்
★ எல்லாநிற பிளவுஸ் பீஸ்கள்
நாதன் ரெக்ஸ்ரைல்ஸ்
179, நவீனசந்தை உட்புறம்
யாழ்ப்பாணம். தொலைபேசி: 23691
தலைமையகம்;
அன்னராஜா ஸ்ரோர்ஸ்
தொலைபேசி: 22608.
[5048]

# ஈழநாடு
THE EELANADU

● சிறந்த சேவை!
● நிறைந்த சலுகை!!
● நிதான வேலை!!!
ரைப்பிங், ரென்சில் கட்டிங், ரோனியோ ஆகியவை சிறந்த முறையிலும் குறுகிய காலத்திலும் செய்துகொள்ளலாம்.
தனியார் கல்வி நிறுவனங்களுக்கு விசேஷ கழிவுண்டு.
"SHABRA"
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். (5127)

மலர் 24 ஐப்பசி 28 முஹறம் 27 இதழ் 274
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 14—11—82

# கூட்டணி - அரசு உயர்மட்ட பேச்சுக்கள் இனி நடக்காது

## ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் இருந்த சுமூக உறவு பாதிப்பு

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் அரசாங்கத்துக்குமிடையில் கடந்த காலத்தில் நிலவி வந்த சுமுக உறவுகள் இனி இருக்கமாட்டாதென நம்பகமாகத் தெரியவந்துள்ளது.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியாகவும், எதிர்க்கட்சித்தலைவரையும் கொண்டதாக விளங்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் அரசாங்கம் எதிர்காலத்தில் எந்தவித உயர்மட்டப் பேச்சுவார்த்தைகளையும் நடத்துவதில்லையென்று முடிவு செய்துள்ளதாக தெரிய வருகிறது.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக, தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி. க்களுக்கும், அரசாங்கத்துக்குமிடையில், சுமூக (12-ம் பக்கம் பார்க்க)

## ஒளிமயமான எதிர்காலம்!

### யாழ். எம். பி.யின் தீபாவளி வாழ்த்து

(யாழ்ப்பாணம்]

"தமிழினத்தின் துன்பங்களும் துயரங்களும் நீங்கி, ஒளிமயமான எதிர்காலம் ஒன்று கிடைப்பதற்கு இத் தீபாவளி தினத்தில் வழிபிறக்கும் என்று நம்பிக்கை கொள்வோம்".

யாழ். எம்.பி. வி யோகேஸ்வரன் வெளியிட்டுள்ள தீபாவளி வாழ்த்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது; "தமிழீழத்தின் இலட்சியத்துக்காக தம்மை அர்ப்பணித்து சிறையிலிருக்கும் தமிழ் இளைஞர்கள் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் நாம் தீபாவளி தினத்தை கொண்டாட 12-ம் பக்கம் பார்க்க)



அனைவருக்கும் தித்திக்கும் 'தீபாவளி' வாழ்த்துகள்
—ஈழநாடு.

## 'இடி' விழுந்ததால் வீடு முற்றாக சேதம்!

[கிளிநொச்சி நிருபர்]

கிளிநொச்சி தொண்டமான் நகரில் திடீரென ஏற்பட்ட இடியின் தாக்கத்தால் க. தர்மலிங்கம் என்பவரின் வீடு முற்றாக சேதமடைந்தது. இடி விழுந்த சமயம் பிரஸ்தாபவீட்டில் தர்மலிங்கமும், அவரது தாய், சகோதரி, மகன், மருமகன் ஆகியோரும் கூடவே இருந்தனர். இடியின் தாக்கத்தால் இவர்கள் அனைவருக்கும் பலத்த எரிகாயங்கள் ஏற்பட்டது. உடனடியாக கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் இவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

12-ம் பக்கம் பார்க்க)

## அவசர சிகிச்சைநிலையம் இருக்கிறது! ஆனால்உபகரணங்கள் இல்லை!!

### இரண்டு கோடி ரூபாய் தேவையாம்

(ஏ. வி. மாணிக்கம்)

யாழ். பெரியாஸ்பத்திரியில் சுமார் நான்கு லட்சம் ரூபா செலவில் அவசர சிகிச்சை நிலையம் ஒன்று கட்டப்பட்டும் அதற்கேற்ற உபகரணங்கள் தளபாடங்கள் இல்லாததால் நோயாளர் பெரும் கஷ்டநிலைக்குள்ளாகினர்.

இந்த அவசர சிகிச்சை நிலையம் இயங்குவதற்கு இரண்டு கோடி ரூபாவுக்குமேல் தேவைப்படுவதாக யாழ். ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனனர்.

1982-ம் ஆண்டு பங்குனி மாதம் இந்த அவசர சிகிச்சை நிலையத்துக்கான அத்திபாரக்கல் நாட்டப்பட்டது. கட்டிட ஒப்பந்ததாரரின் முயற்சியினால் ஏழுமாதத்துக்குள் நான்கு லட்சம் ரூபா செலவில் கட்டிட வேலைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

யாழ். பெரியாஸ் பத்திரியில் கடமையாற்றும் சகல ஊழியர்கள் வடபகுதியிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள், வர்த்தக வங்கிகள், கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலுமுள்ள பிரபல வர்த்தகர்கள், இலங்கையிலுள்ள தூதுவராலயங்கள் சமூக ஸ்தாபனங்கள் ஆகியன வழங்கிய நிதியைக்கொண்டே

(12-ம் பக்கம் பார்க்க)

அனைவருக்கும் தித்திக்கும் 'றிக்கோ'வின் தீபாவளி வாழ்த்துக்கள்!
தேன்சிந்தும்
ஐஸ்கிறீம்
வகைகள்!
கேக் வகைகள்!
இனிப்புவகைகள்!
அனைத்துக்கும்
றிக்கோ
றிக்கோ
றிக்கோ மிக்சர்
தரத்தில் குன்றுதது!
றிக்கோ கோப்பி
சுவையில் அலாதி!
நினைத்தால் இனிக்கும்!
[5166]
யாழ். நகரில் றிக்கோவுக்கு கிளைகள் கிடையாது!

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

வவுனியா நகர எல்லைக்குள் தச்சன்குளத்தில்தென்னை,மா, பலா மரங்களுடனும் பெரிய கிணற்றுடனும் 5 ஏக்கர் உயர்நிலம் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். K. வேலுப்பிள்ளை நிறைவேற்று பொறியியலாளர், பெருந் தெருக்கள் திணைக்களம், வவுனியா. அல்லது T சிவசுப் பிரமணியம், 22/2, ஆஸ்பத் திரி வீதி, யாழ்ப்பாணம். 5129

சரசாலை வடக்கு கல்வயல் (அரசர் தோட்டம்) என்னு மிடத்தில் 30 பரப்பு காணி விற்பனைக்குண்டு, கிணறு வசதியுண்டு. முள்ளிக்காடு என்னுமிடத்தில் வயல் 25 பரப் பும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: பொ. இராமலிங்க மூர்த்தி, சாஸ்திரியா வளவு, இமையாணன், உடுப்பிட்டி. 5154

4½ பரப்புக்காணி கல்வீடு நல்ல தண்ணீர் கிணறு முத லிய வசதிகளுடன் வதிரியிலி யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலத்துக்குக்கிட்ட உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளும் விலா சம்: S. A. பரமானந்தம், 333, ஆடியபாதம் வீதி, நல் லூர், யாழ்ப்பாணம். 5155

ஹோட்டல்கள், கூல்பார் ஆகியவற்றிற்குப் பொருத்த மான 10 க அடியும் 2 கதவு களும்கொண்ட நஷனல் குளிர் சாதனப்பெட்டி உடன் பணத் துக்கோ அல்லது தவணைமுறை யிலோ மலிவான விலையில் விசேடகழிவுடன் விற்பனைக்கு உண்டு. "SHABRA", 207, மின்சாரநிலைய வீதி, யாழ்ப் பாணம். 5149

1¼ பரப்பு குடியிருப்புக் காணி வீடு யன்னல் மட்டம் கட்டப்பட்டது விற்பனைக்கு உண்டு. வே. யேசுராசா, 999/1, பீச் ரோட், கொழும் புத்துறை. 5151

புதிய எண்ணெ வெற்று பரல் கள் உடன் விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடலாம். பெனின்சுலா, 9, கண்டி வீதி, நாவற்குளி. 5131

யாழ். மாநகரசபை எல்லைக் குள் புதிய சோனக தெருவில் 35பரப்புகாணி முழுதாகவோ, துண்டுகளாகவோ விற்கப் படும். கடிதமூலம் தொடர்பு கொள்க. விளம்பர இல: 5077, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப் பாணம். 5077

சினைப் படுத்தப்பட்டதும், பால் கொடுத்துக்கொண்டிருப் பதுமான நல்ல இன கேப்பை மாடுகள் விற்பனைக்குண்டு. நேரில் வரவும். சி. கனகசூரி யர், மேதர்ஸ் பிளேஸ், மானிப் பாய். 5133

தமிழ், ஆங்கில தட்டச்சு, ரேனியோ மெசின்கள் விற் பனைக்குண்டு. தொடர்பு: நிர் வாகி, சங்கர் ஹாட்லி இன்ஸ்ரிரியூட், பிரதான வீதி, பருத்தித்துறை. 4864

நல்லூர் முத்திரைச் சந் தைக்கு அருகாமையில் உள்ள அரச வீதியில் 5½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க. S செல் லத்துரை 96, செல்லர் ரோட் நல்லூர். 5102

## தேவை

இஸ்சு E. L. F. 350 வான் தேவை. விலை விபரங்களுடன் அறிவிக்கவும். மரபொடியுடன் கூடியது விரும்பத்தக்கது விண் ணப்பிக்க: விளம்பர இல: 5118, மே/பா ஈழநாடு, யாழ்ப் பாணம். 5118

சோப் விற்பனையில் கைதேர்ந்தவரும், சோப் விற் பனையை ஊக்குவிக்கக்கூடியவ ருமான விற்பனை பிரதிநிதி உடன் தேவை. திறமைக்குத் தகுந்த ஊதியம் வழங்கப் படும். விண்ணப்பிப்பவர்கள் 30-11-82 முன்பதாக தங்கள் விண்ணப்பங்களை கீழ் குறிப் பிட்ட விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். பெனின்சுலா சோப் இன்டஸ்றீஸ், 25, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம் 5132

யாழ். குடாநாட்டின் பல பாகங்களுக்கும் வானில் சென்று வியாபாரம் செய்வ தற்கு அனுபவமுள்ள விற்பனை பிரதிநிதி தேவை. போதிய சிங்கள அறிவு அவசியம். காலை 9 மணிக்கு நேரில் வரவும். லாலா சோப் தொழிற்சாலை, அச்சுவேலி. 5148

கிளிநொச்சியில் ஆரம்பிக்க இருக்கும் அச்சகத்தில் வேலை செய்ய அனுபவமுள்ள கொம்போசிட்டர் பிளேடன் மெசின் மைன்டர் தேவை இரண்டும் தெரிந்த ஒருவர் விரும்பத்தக்கது. நற்சாட்சிப் பத்திரத்துடன் 15-11-82ல் நேரில் வரவும். K. L. A. and Sons, பிரதான வீதி, பண்டத் தரிப்பு. 5147

யாழ். நகரப் பகுதிக்குள் அறை அல்லது சிறுவீடு காரி யாலயப் பாவிப்பிற்கு வாட கைக்கு உடனடியாகத்தேவை. விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. 5150, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 5150

ராதிகா மூவிஸ் தயாரிக்கும் "கண்ணீர் கோடுகள்" வீடியோ படத்திற்கு நடிக, நடிகைகள் தேவை. இதற் கான விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. விண்ணப்பப்படி வங்களுடன் புகைப்படப்பிரதி யும் அனுப்பும்படி கேட்டுக் கொள்கின்றோம். தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: டிங்கிரி கனகலிங்கம், 34, யாழ் வீதி, யாழ்ப்பாணம். 5112

## பயிற்சி

P. M. G. சான்றிதழ் Ship Radio Officers ஜூன்/ நவம்பர் 1983 இற்கான ஸ்பெசல், ஜெனரல்வகுப்புகள் 20-11-82 இல் ஆரம்பம். மாத கட்டணம் 4பாடங்களுக்கும்) ரூ 120/- விபரங்கட்கு: க. இராசரத்தினம், இம்பீரியல் தொழில் நுட்ப பயிற்சி நிலை யம், கே. கே. எஸ். வீதி, தெல்லிப்பளை. 5116

## வகுப்பு

DEUTSCH- GERMAN கொழும்பு ஜேர்மன் கலாச்சார நிலையத்தில் நடத்தப்படும் பரீட்சைக்கான புதிய ஆரம்ப வகுப்புகள் 15-11-1982ல் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமா கிறது. வகுப்பு நேரங்கள் காலை 6—8 மணி, மாலை 5—8 மணி வரை. தொடர்பு: சபாநாயகம், "றூடிக்கொட்" 33, கண்டி வீதி, யாழ்ப்பா ணம். 5139

## நல்லூர் ப. நோ. கூ. சங்கம்
## விளம்பரம்

வடமாகாணத்தில் இருந்து கண்டி, நுவரெலியா. தலவாக் கொல்லை ஆகிய இடங்களுக்கு லொறிமூலம் பொருட்களைக் கொண்டுசெல்ல விரும்புபவர் கள் பொதுமுகாமையாளர், நல்லூர் ப. நோ கூ. சங்கத் துடன் தொடர்புகொள்ளவும்.

பொதுமுகாமையாளர்,
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்.
தொ. பேசி: 23646.

5157

## நல்லூர் ப. நோ. கூ. சங்கம்
## விற்பனைக்கு
### 2 சில்லு உழவுயந்திர கலப்பை
(புதியது)

காரியாலய நேரத்தில் (காலை 8-00 மாலை 5-00) பார்வையிட்டு கேள்வி விண் ணப்பங்களை பதிவுத்தபால் மூலம் 25-11-82-ந் திகதிக்கு பிந்தாமல் தலைவர், நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வும். விண்ணப்பங்களை ரூபா 5/-செலுத்திக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொதுமுகாமையாளர்,
நல்லூர்
ப. நோ. கூ. சங்கம்,
திருநெல்வேலி.
தொ. பேசி: 23646

(5156)

வட்டுலயன்ஸ் வழங்குகிறது

# அநாதை இல்லச்சிறுவருக்கு தீபாவளி பரிசு

[யாழ்ப்பாணம்]

திருநெல்வேலி முத்துத்தம்பி அநாதைச் சிறுவர்கள் இல்லத் தில் வதியும் சுமார் 250 சிறு வர் சிறுமியருக்கு வட்டுக் கோட்டை லயன்ஸ்கழகம் தலா இரண்டு சீருடைவீதம் வழங்க ஒழுங்கு செய்துள்ளது.

தீபாவளி தினமான இன்று 9 மணிக்கு மேற்படி சிறுவர் சிறுமிகளுக்கு சீருடை வழங்கப் படும். இந்த வைபவத்தில் கொழும்பு துல்டெக்ஸ் நிறுவ னத்தின் பொதுமுகாமையா ளர் திரு. சீனிவாசன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள் வார்.

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் வழங்கும் இந்தச் சீருடைகளைத் தயாரிக்க கொழும்பு துல்டெக்ஸ் நிறு வனம் துணிகளை வழங்கிஉதவி யுள்ளது.

மூன்றும் கட்டத்

# தொழிலாளர்கள் மீது தீவிர கண்காணிப்பு!

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை 3-ம் கட்டப் பிரிவில் தொழிலாளர்களது கடமை உதாசீனம் குறித்து தீவிர கண்காணிப்பு செலுத் தப்பட்டுள்ளது.

மேற்படி 3ம் கட்டப்பிரிவில் கடமைபுரியும் தொழிலாளர் கள் இரவு நேரங்களில் தமது கடமையை உதாசீனம் செய்து தூக்கத்தில் ஆழ்ந்துவிடு வதாலேயே இக்கண்கா ணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள் ளதாகத் கூறப்படுகிறது,

இரவுநேரங்களில் அடிக்கடி உயர் அதிகாரிகள் வேலைப் பகுதிகளை சுற்றிப்பார்வை யிட்டு தொழிலாளர்களது நிலையைக் கண்காணித்துவரு கிறார்கள்.

கடமையை சரிவரச்செய் யாத தொழிலாளர்களும், தூக் கத்தில் ஆழ்ந்துவிடும் தொழி லாளர்களும் உடனடி வேலை நீக்கத்திற்குள்ளாகிவருகிறார் கள்.

மேற்படி 3ம் கட்டப்பிரிவில் கிராம அபிவிருத்திச் சங்கங் களால் ஒப்பந்த அடிப்படை யில் வழங்கப்பட்ட தொழிலா ளர்களே கூடுதலாக கடமை யாற்றுகிறார்கள்,

3ம் கட்டப்பிரிவில் வேலைகள் பூர்த்தியடைவதால் ஆட் குறைப்புச் செய்யும் நோக்குட னேயே இத்தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்படுவதாக தொழிலாளர்கள் மத்தியில் பேசிக்கொள்ளப்படுகிறது. டிசம்பர் மாதம் 15ம் திகதி யளவில் மேலும் ஆட்குறைப்பு இடம்பெறலாமெனவும் எதிர் பார்க்கப்படுகிறது.

## அறிவித்தல்

நீர்வேலி பாலர் பகல் விடுதியின் 14-11-82ல் நடை பெறவிருந்த லொத்தர் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணங்களால் 14-1-83 பிற்பகல் 4-30 மணிக்கு பிற் போடப்பட்டுள்ளது.

பொதுச்செயலாளர்.
(5146)

## பணிப்பெண் தேவை

ஆங்கிலம் பேச எழுதத் தெரிந்த தமிழ்ப் பணிப்பெண் தேவை
தொடர்பு கொள்ள
புகைப்படமும் கல்வித் தகமை சான்றிதழ்களும் அனுப்பி வைக்கவும்.
Mrs. Navaratnam,
Toa Payoh North, P. O. Box, 708, Singapore 9131.
(5084)

## மன்னார் மாவட்ட அபிவிருத்திச்சபை
வழங்குநர்களுக்கான
## கூறுவிலை விண்ணப்பம் – 1983

பின்வரும் பொருட்களுக்கான கூறுவிலை விண் ணப்பங்கள் 1982-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 8-ந் திகதி பிற்பகல் 2 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப் படும்.

1. சௌக்கிய சேவைப் பொருட்கள்
2. காகிதாதிகள்
3. மின்சார உபகரணப் பொருட்கள்
4. ஆயுள்வேத மருந்து வகைகள்

விண்ணப்பப் பத்திரங்களைப் பெற விரும்புவோர் பிணைப்பணமாக ரூபா 100/-ஐயும், (மீளளிக்கப் படக்கூடியவை) கேள்விப்பத்திரப்பணமாக ரூபா 25/-ஐயும் (மீளளிக்கப்படமாட்டாது) அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம் கூறுவிலைப்பத்திரங்கள் வழங் கப்படும் கடைசித் திகதி: 6-12-82. மேலதிக விபரங் களையோ, வழங்குநர்களுக்கான கூறுவிலைப் படிவங் களையோ மன்னார் மாவட்ட அபிவிருத்திச்சபைச் செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு: 1982-ம் ஆண்டு வழங்குநர்களாகப் பதிவு செய்தலுக்கு பிணைப்பண மாக ரூபா 100/- செலுத்தியோர் பிணைப்பணம் செலுத்தத் தேவை யில்லை.


சி. பற்குணம்,
உதவிச்செயலாளர் (விநியோகம்),
செயலாளருக்காக.

(5114)

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

வாடிக்கையாளர்கள்
அன்பர்கள்
நண்பர்கள்
அனைவருக்கும்
தித்திக்கும்
தீபாவளி
நல்வாழ்த்துக்கள்

யாழ்நகரில்
பலவகைப்
பரிசுப் பொருட்கள்



எவர்சில்வர்
கிளாஸ் வகைகள்
ரி. வி. றேடியோ
கடிகாரங்கள்
மின் இயக்கப் பொருட்கள்
பிளாஸ்ரிக் பொருட்கள்
பிளாஸ்ரிப் பூக்கள்
சமையலறை உபகரணங்கள்
எண்ணம் போல்
வண்ணத் தெரிவுக்கு
பிரவுண்சன்
ரேட் சென்ரர்
பன்முகக் கூட்டுறவுக் கட்டடம்
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

# தடுப்புக்காவலிலிருந்து வாலேஸா விடுதலை

வார்ஸோ, நவ. 13

போலந்தில் தடைசெய்யப்பட்டுள்ள சொலிடாறிற்றி தொழிற்சங்கத்தின் தலைவர் திரு. லேக்வாலேஸா தடுப்புக்காவலிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

கடந்த டிசம்பர் மாதம் போலந்தில் இராணுவ ஆட்சி அமுலுக்கு வந்ததிலிருந்து திரு வாலேஸாவும் மற்றும் சில தொழிற்சங்கத் தலைவர்களும் அரசாங்கத்தால் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர்.

சொலிடாறிற்றி தொழிற்சங்கம் தடைசெய்யப்பட்டதற்கு எதிர்ப்புத்தெரிவித்தும், வாலேஸாவை விடுதலை செய்யுமாறு கோரி தொழிலாளர்கள் போலந்தின் நகர்களிலும், தலைநகரமான வார்ஸோவிலும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை அண்மையில் நடத்தியமை தெரிந்ததே.

வாலேஸாவின் விடுதலை குறித்து அவரது மனைவியுடன் நிருபர்கள் தொடர்புகொண்டபோது ''தமது கணவர் எங்கிருக்கிறாரென்று தெரியவில்லை'' என்றுஅவர்பதிலளித்துள்ளார். (வெ)

## நுஸ்ரத் பூட்டோவிற்கு வெளிநாடுசெல்ல அனுமதி

இஸ்லாமாபாத், நவ. 13

நுரையீரலில் புற்றுநோய் ஏற்பட்டுள்ளதாகச் சந்தேகிக்கப்படும் திருமதி நுஸ்ரத் பூட்டோவிற்கு வெளிநாடு சென்று சிகிச்சை பெற பாகிஸ்தான் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

திருமதி பூட்டோவின் உடல்நிலை மோசமடைந்ததைத் தொடர்ந்து அவரை வெளிநாட்டுக்குச் சென்று சிகிச்சை பெறுமாறு டாக்டர்கள்ஆலோசனை கூறியிருந்தனர். ஆரம்பத்தில் இதற்கு பாகிஸ்தான் அரசு அனுமதிமறுத்திருந்தது.

திருமதி நுஷ்ரத் பூட்டோவை வெளிநாடு சென்று சிகிச்சைபெற அனுமதிக்குமாறு இந்தியப்பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் ஷியாவுல் ஹக்கிடம் கேட்டிருந்தது தெரிந்ததே. (வெ)

## பிரெஷ்நேவுக்கு மக்கள் அஞ்சலி

மாஸ்கோ, நவ. 13

மறைந்த சோவியத் ஜனாதிபதி லியோனிஸ்ட் பிரஷ்நேவ்வின் பூதவுடலுக்கு ஆயிரக்கணக்கான மக்கள் சென்று அஞ்சலி செலுத்தி வருகிறார்கள்.

பிரஷ்நேவின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்ளும் பொருட்டு இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி இன்று மாஸ்கோவுக்குப்பயணமாகவுள்ளார்.

அமெரிக்க உபஜனாதிபதி திரு. ஜோர்ஜ் புஷ்ஷும் பிரஷ்நேவின் இறுதிச்சடங்குகளில் கலந்துகொள்ளவுள்ளார்.

பிரஷ்நேவின் மரணச்சடங்குகள் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது தெரிந்ததே. செஞ்சதுக்கத்திலுள்ள லெனின் சமாதிக்கு அருகில் பிரஷ்நேவின் பூதவுடல் அடக்கம் செய்யப்படவுள்ளது. (வெ)

## கிரிக்கெட்: சிம்பாப்வே: 7-294

லண்டன், நவ. 13

இலங்கை கிரிக்கெட் கோஷ்டிக்கும் சிம்பாப்வே கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையே நடைபெற்றுவரும் நான்கு நாள் கிரிக்கெட் ஆட்டத்தில் சிம்பாப்வே கோஷ்டி தனது முதலாவது இன்னிங்சில் 7 விக்கட்டுகளை இழந்து 294ஓட்டங்களை பெற்றுள்ளது. (வெ)

## விநோபாவேயின் உடல்நிலையில் மாற்றமில்லை

புதுடில்லி, நவ. 13

ஆச்சார்ய விநோபாவேயின் உடல் நிலையில் எந்தவிதமான மாற்றமும் நேற்று ஏற்படவில்லையென்று அறிவிக்கப்பட்டது. (வெ)

## லொறிவிபத்து: இருவர் பலி

சென்னை. நவ. 13

சேலம் மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற லொறி விபத்தொன்றில் இருவர் பலியானதாக அறிவிக்கப்பட்டது. (வெ)

## சட்டப்பேரவை முடிவுகள்

புதுடில்லி, நவ. 13 நாகலாந்து சட்டபேரவைத் தேர்தலையடுத்து இதுவரை வெளியான 55 இடங்களின் முடிவுகளில் 23இடங்களை இந்திராகாங்கிரஸும், 21 இடங்களை நாகலாந்து தேசிய ஜனநாயகக் கட்சியும் 11இடங்களை சுயேச்சைகளும் பெற்றுள்ளன. (வெ)


உ
சிவமயம்
அன்பர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான
தீபாவளி வாழ்த்துக்கள்
**கலாஜோதி மில்ஸ்**
51/10, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் இனிய
தீபாவளி வாழ்த்துக்கள்
அழகிய பவுண் நகைகள்
தங்கப்பவுண் வைரங்களுக்கு
**கே.என்.எம். மீருன்சாஹிப்**
தங்கப்பவுண் நகைமாளிகை
நகை வியாபாரம்
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
போன்: 22585

அனைவருக்கும் இனிய
தீபாவளி வாழ்த்துக்கள்
வடஇலங்கையின் பிரபல
நகை, வைர வியாபாரிகள்
**ஹரன் ஜுவல்லர்ஸ்**
50, கன்னாதிட்டி வீதி, : யாழ்ப்பாணம்.
போன்: 22444

அனைவருக்கும் இனிய
தீபாவளி வாழ்த்துக்கள்
மாற்றுக்குறையாத நகைகளுக்கு ஜப்பான் ஜுவலர்ஸ்
கண்ணைக்கவரும் நகைகளுக்கு ஜப்பான் ஜுவலர்ஸ்
நவீன டிசைன்களைத் தருவதில் முன்னணியில் நிற்பவர்கள்
★ ஜப்பான் ஜுவலர்ஸ் ★
மூன்று தலைமுறையாக சேவையாற்றி வருபவர்கள்
ஜப்பான் ஜுவலர்ஸ்
**ஜப்பான் ஜுவலர்ஸ்**
64, கன்னாதிட்டி, வீதி, யாழ்ப்பாணம்.
phone: 22518

அனைவருக்கும் அன்பு கலந்த
தீபாவளி வாழ்த்துக்கள்
நம்பிக்கையான நவநாகரிக தங்க, வைர
நகைகள் வேண்டுமா?
**பொ. அம்பலவாணர்**
தங்க வைர நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.
போன்: 23199 தந்தி: ''வைரம்''

அன்புள்ளங்கொண்ட தமிழ்ப்
பெருங்குடி மக்களுக்கு எமது
தீபாவளி வாழ்த்துக்கள்
நீண்டகாலமாக
தாங்கள் விரும்பும் சகலவிதமான
சைக்கிள்களுக்கும் தேவையான
உதிரிப்பாகங்களை
இல்லையென்னாது வழங்கிவரும்
**சேது சைக்கிள் ஸ்ரோர்ஸ்**
24, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் இனிய
தீபாவளி வாழ்த்துக்கள்
★ கோயில் அபிஷேக சாமான்கள்
★ மருந்துச் சரக்குகள்
★ வாசனைத் திரவியங்கள்
சகல விதமான சாமான்களையும் சகாய விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.
**க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்**
மருந்துச் சரக்கு வியாபாரம்
76, பெரியகடை, யாழ்ப்பாணம்.

அன்பர்கள், வாடிக்கையாளர்கள், நண்பர்கள் யாவருக்கும் எமது
தீபாவளி நல் வாழ்த்துக்கள்!
தரமான ஜவுளித் தினுசுகளுக்கும்-சகலவிதமான சாறி வகைகளுக்கும் ஏற்ற
பிளவ்ஸ் துணிகளுக்கும், புதிய டிசைன் சாறிகளை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளவும்
**'பாலேந்திராஸ்'**
170, நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23071
5135

## "பொதுசன வாக்கெடுப்பு ஜனநாயகத்திற்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலாகும்"

### கம்யூனிஸ்ட் (இடது) அறிக்கை

(யாழ்ப்பாணம்)

"தனிநபர் – தனிக்கட்சி சர்வாதிகாரத்தை மேலும் உறுதிப்படுத்திக் கொள்ளும் உள்நோக்கத்துடனேயே பொதுத் தேர்தலுக்குப் பதிலாகப் பொதுசனவாக்கெடுப்பு நடாத்தப்படவுள்ளது. இது ஜனநாயகத்திற்கும் மக்களின் சுதந்திரத்துக்கும் நேரடியாக விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலாகும்."

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட்கட்சியின் (இடது) தேசிய அமைப்புக்கமிட்டியின் சார்பில் அதன் செயலாளர் திரு கே ஏ. சுப்பிரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"மக்களுக்கு ஏற்கனவே கொடுத்துள்ள வாக்குறுதியின்படி பாராளுமன்றப் பொதுத்தேர்தலை நடாத்தி மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆசனங்களைப் பெற முடியாது என்பதை உணர்ந்து கொண்டதாலேயே யூ என். பி.யும் ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் பொதுத்தேர்தலைவிட்டுபொதுசன வாக்கெடுப்பை நடாத்தவுள்ளனர். அதேவேளை எதிர்க்கட்சியினரைப்பழிவாங்கியும் எதிர்க்கருத்துடையோரை விசாரணைக்குட்படுத்தியும், பத்திரிகைகள் சிலவற்றுக்குத் தடைவிதித்தும், அச்சகங்கள் சிலவற்றுக்கு சீல் வைத்தும் அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது. ஜனாதிபதி தேர்தலுக்குப் பின் ஆரம்பித்துள்ள இவ் அரசியல் பழிவாங்ல் நடவடிக்கைகள் பொதுசன வாக்கெடுப்பின் பின்பு நேரடியாகவே எதிர்க்கட்சிகளை தடைசெய்துவிடும் நிலைக்குக்கொண்டுசென்றுவிட்டாலும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

"பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தைப் பொதுத் தேர்தலின்றிப் பொதுசன வாக்கெடுப்பின் மூலம் நீடிக்க முற்படுவது அரசாங்கத்தினதும், ஜே. ஆர்.ஜெயவர்த்தனவினதும் குறுக்கு வழியையும் அதில் அடங்கியிருக்கும் அரசியல் அபாயத்தையும் நாட்டு மக்கள் அனைவரும் புரிந்து கொள்வது மிக அவசியம் என எமது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி [இடது] வற்புறுத்துவதுடன், மக்கள் இவ் ஆபத்துக்கு எதிராகவும் அணிதிரள வேண்டும் எனவும் எமது கட்சிகேட்டுக்கொள்ளுகின்றது" எனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தமிழரின் பண்பாட்டை எடுத்தியம்பும் பண்டிகை

### 'குமார்' தீபாவளி செய்தி

(கொழும்பு)

"தமிழினத்தின் வரலாற்றில், விழாக்கள் பண்டிகைகள் பின்னிப்பிணைந்தொன்றுகும் அவை எம்மினத்தின் கலாச்சார பின்னணியை பண்பாட்டினை எடுத்து இயம்புபவனாய் மிளிர்கின்றன. அத்தகைய விழாக்களில் தீபாவளி பண்டிகை தனித்துவமானது"

தமிழ்க்காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் தீபாவளி வாழ்த்துச்செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்

அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: வாழ்நாள் முழுவதும் தன்மாயையினாலும், அக்கிரமத்தினாலும் உலகை ஆட்டிப் படைத்துவந்த அரக்கன் ஒருவன் தன்வாழ்வின் இறுதித் தருணத்தில் தோன்றிய மெஞ்ஞானத்தால் அழிந்தொழிந்த தினத்தை உலகத்தோர் மகிழ்வுடன் கொண்டாடவேண்டுமென்று விடுத்த கோரிக்கையின் பயனாக தீபாவளி கொண்டாடப்படுகிறது என்பது புராணம்.

தீபாவளி பண்டிகையன்று தீபங்களை வரிசையாக ஏற்றிக் கொண்டாடுவது தமிழ் மரபு. அவ்வொளிவிடும் தீபங்கள் போன்று தமிழினத்தின் வாழ்வும் மங்களம் பொழிந்து, ஒளிர்ந்து சிறந்திட உளம் நிறைந்து வாழ்த்துகிறேன். (க)

## கூட்டணி ஆதரவு அரச அதிகாரிகளுக்கு 'கல்தா'?

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவாளர்கள் என்று கருதப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு விரைவில் கல்தா கொடுக்கப்படலாம்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் போக்கு அரசாங்கத்துக்குசாதகமாகஇல்லையென்று கருதப்படுவதால் இந்நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைகள் அரசாங்கத்துக்கு எதிராகவே இருந்து வருகிறது என்றும் யு. என். பி.யின் தோழமைக்கட்சியாக அதனைக் கருதக்கூடாது என்றும் யு. என். பி.யைச் சேர்ந்தவர்கள் பலர் ஜனாதிபதி திரு. ஜே ஆர், ஜயவர்த்தனவுக்குப் புகார் கூறியிருப்பதாகவும் கூட்டணியை சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் போலவே ஒரு எதிர்க்கட்சியாகக் கருதவேண்டும் என்றும் அவர்கள்கோரியிருப்பதாகவும் கூறப்படுகின்றது. முதல் கட்டமாக வடக்கு, கிழக்கு, வன்னிப்பகுதிகளில் கூட்டணி ஆதரவாளர்கள் என்று நம்பப்படும் அரசாங்க அதிகாரிகள் அனைவரையும் பதவிநீக்கம் செய்யவேண்டும் என்று இவர்கள் விடுத்துள்ள கோரிக்கையை ஆலோசனைக்கெடுக்க ஜனாதிபதி இசைந்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

## கொள்ளை வழக்கு எதிரிக்குப் பிடிஆணை

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை கொள்ளை வழக்கு விசாரணைக்கு நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறிய எதிரியொருவருக்கு பிடி ஆணை பிறப்பிக்கப்பட்டது.

தெல்லிப்பழையைச் சேர்ந்த கந்தையா குலசேகரம் என்பவரது வீட்டினுள் ஆயுத முனையில் புகுந்து வீட்டிலிருந்த நகை, பணம் ஆகியவற்றைக் கொள்ளையடித்தது தொடர்பாக சுரும்பசிட்டியைச் சேர்ந்த இராஜரத்தினம் ஜெயகுமார், சுபபிரமணியம் விஜயகுமார் ஆகிய இரு நபர்களுக்கெதிராக சுன்னாகம் பொலிசார் தொடர்ந்திருந்த வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் ஏற்கனவே விசாரணை செய்யப்பட்டு ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இவ்வழக்கு மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்ட சமயம் 2-ம் எதிரியும், வழக்காளிதரப்பினரும்ஆஜராயிருந்தனர். 1-ம் எதிரி நீதிமன்றத்தில்ஆஜராகி இருக்கவில்லை இதனையடுத்து மல்லாகம்பதில் நீதிபதி திரு. கே. குணரத்தினம் 1ம் எதிரியான இராஜரத்தினம் ஜெயகுமாருக்கு பிடி ஆணை பிறப்பித்து வழக்கின் விசாரணையை ஜனவரி மாதம் 25ம் திகதிக்குஒத்திவைத்தார்.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ம. ஶ்ரீதரன் ஆஜரானார் வழக்காளிதரப்பில் சுன்னாகம் பொலிசாருடன் சட்டத்தரணி எஸ். பாலசிங்கம் ஆஜரானர்.

## "வாழ்க்கையின் வளத்துக்கு சேமிப்பு அவசியம்"

(நெடுந்தீவு)

"வாழ்க்கையின் வளத்துக்கு சேமிப்பு மிக அவசியமாகும். பெண்கள், சிறுர்களுக்கு சேமிப்புத் திட்டம் பல்வகையிலும் பயனை அளிக்கும். சுயதொழில் முதலீட்டை நாளையசந்ததியினருக்கு வழங்கும். இப்பகுதியின் அபிவிருத்திக்கு மக்கள் வாழ்வின் உறுதிப்பாட்டுக்கு கிராமிய வங்கி நிச்சயமாக வழிவகுக்கும்."

இவ்வாறு நெடுந்தீவு மேற்கு மகளிர் குழுவின் கூட்டத்தில் நெடுந்தீவு ப. நோ. கூ. சங்கப் பொதுமுகாமையாளர் திரு இரா தர்மலிங்கம் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

இக்கூட்டம் திருமதி சேதுப்பிள்ளை கதிரேசு தலைமையில் நடைபெற்றபோது, நெடுந்தீவு ப நோ. கூ. சங்கத்தின் தலைவர் திரு. என். இராமச்சந்திரன் திருமதி த. முத்துப்பிள்ளை, மகளிர் குழுவின் கல்வி உத்தியோகத்தர் செல்வி டெய்சி அல்பிரட், திருமதி கு. மரகதம் ஆகியோரும் உரையாற்றினர்கள் நெடுந்தீவு மேற்கு பாரதி வித்தியாசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (உ)

## பதில் அதிபர்களுக்கு நிரந்தர நியமனம்

### கல்வியமைச்சருக்கு அதிபர்கள் சங்கம் நன்றி

(யாழ்ப்பாணம்)

"பதில் அதிபர்களாகவுள்ளவர்கள் அனைவரையும் நிரந்தரமாக்க வேண்டுமென்ற எமது கோரிக்கையை ஜூன் மாதம் கல்வியமைச்சரிடம் சமர்ப்பித்தோம். இது பற்றி தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களும் பாராளுமன்றத்தில் குரல் கொடுத்தார்கள். தற்பொழுது நாடு பூராவும் பதில் கடமையாற்றிய அதிபர்களை நிரந்தரமாக்கி கல்வியமைச்சு கடிதங்கள் அனுப்பியுள்ளமைக்கு நாம் கல்வியமைச்சருக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்".

இவ்வாறு வடமாகாண அதிபர்கள் சங்கம் யாழ் வேம்படி மகளிர் உயர்தரக் கல்லூரியில் நடத்திய பொதுக்கூட்டத்தில் தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது.

வடமாகாண அதிபர்கள் சங்கத் தலைவர் திரு. க. அருணாசலம் தலைமையில்நடைபெற்ற இக்கூட்டத்தில் "பதில் அதிபர்களை நிரந்தரமாக்கும் போது சில குறைபாடுகள் நிகழ்ந்துள்ளதாகவும், அவற்றையும் நிவர்த்திசெய்து, நிவாரணம் வழங்குப்படிகல்வியமைச்சரைக் கேட்டுக்கொள்வதென்றதீர்மானமும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இதுதொடர்பாக பாதிப்படைந்த பதிலதிபர்களிடம் விபரம் கோரியிருப்பதாயும், கூடிய விரைவில் தம்மாலான நடவடிக்கையை எடுப்பதாக வடமாகாண அதிபர்கள் சங்கச் செயலாளர் திரு. எஸ். இரா. சண்முகரத்தினம் தெரிவித்துள்ளார். (வெ)

2-ம் சந்தேகநபருக்குப் பிணை:

## ஆட்சேபனையை 15க்கு முன் சமர்ப்பிக்க வேண்டும்

### பொலிசாருக்கு நீதிபதி உத்தரவு

(மாவிட்டபுரம்)

திருநெல்வேலி கொள்ளைச் சம்பவம்தொடர்பாக றிமாண்டிலுள்ள இரண்டாவது சந்தேக நபரை பிணையில் விடுவது குறித்து பொலிஸ் தரப்பிலான ஆட்சேபனைகளை இம் மாதம் 15ம் திகதி தம்முன் தெரிவிக்குமாறு யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

திருநெல்வேலியில் திருமதி கனகம்மா குமாரசாமி என்பவரது வீட்டினுள் புகுந்து ஆயுதமுனையில் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான நகை, பணம் ஆகியவற்றைக் கொள்ளையடித்தது தொடர்பாக வசாவிளானைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை தர்மராஜா, செல்வகுமார் இரவீந்திரராஜா ஆகியோரும் யாழ். கொட்டடியைச் சேர்ந்த கனகசபாபதிஜெகதீஸ்வரன், இராமசாமி யோகசுந்தரம் ஆகியோரும் சந்தேகத்தின் பேரில் கைதாகி றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் முதலாவது சந்தேக நபர் யாழ். மேல் நீதிமன்றத்தில் ஏற்கனவே செய்யப்பட்ட பிணை விண்ணப்பத்தையடுத்து பிணையில் செல்ல அனுமதி கிடைத்தமையால் 10ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இதேபோன்று இரண்டாவது சந்தேகநபரையும் பிணையில் விடவேண்டுமெனக்கோரி யாழ். மேல் நீதிமன்றத்தில் பிணை விண்ணப்பம் ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

சட்டத்தரணி எம். ஶ்ரீதரன் இவ்விண்ணப்பத்தை தாக்கல் செய்து இச்சம்பவத்தின் முக்கிய சந்தேகநபரான 1ம் சந்தேக நபரை பிணையில் செல்ல அனுமதித்துவிட்டுஇரண்டாம் சந்தேக நபரை தொடர்ந்தும் றிமாண்டில் வைத்திருப்பது நியாயமல்ல. அவரையும்பிணையில் விடவேண்டுமெனக் கோரினார்.

இதனையடுத்து மேல் நீதி

[9-ம் பக்கம் பார்க்க]

## 20,000 ஒதுக்கீடு

(சாவகச்சேரி)

மீசாலை தெற்கு கமலாம்பிகை வித்தியாசாலை அதிபர் திரு. வே நாகராசா எடுத்துக் கொண்ட பெருமுயற்சியால் மீசாலை தெற்கு கிராமோதய சபை இப்பாடசாலைக்கு ஓர் புதிய கட்டிடம் அமைப்பதற்காக ரூபா 20.000 ஒதுக்கியிருக்கிறது. (க)

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய தீபாவளி வாழ்த்துக்கள்!
தேன்சிந்தும் ஐஸ்கிறீம் வகைகளுக்கும், சுவையான கட்லெட், றோல், லட்டு, மஸ்கெட்
மற்றும் பண்டங்களுக்கும், சுவைததும்பும் நிறுவனம்
ரவர் கோப்பி அன் கூல் பார்
324, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். போன் : 23891

# ‘உங்களுக்குத் தொழிலிங்கே அன்பு செய்தல் கண்டீர்’

தவபலத்தை தீயவழியில் பயன்படுத்தித் கொடுமை புரிந்த நரகாசூரனை திருமால் சங்காரம் பண்ணி நமக்கும் நரகாசூரனுக்கும் அருள்புரிந்த நாளே தீபாவளிநாளாகும். இத்தினத்தில் கோடி ஆடை அணிந்து இனசனத்தவர்களுடன் கொண்டாடி மகிழ்வதிலேயே எல்லோரும் திருப்தியடைந்து விடுகின்றனர்.

தீபாவளிநாளில் நாமும் நம் முன்னே உள்ள அசுரத் தன்மைகளை-நம் ஆணவத்தா நமக்கும் பிறர்க்கும் வரக்கூடிய தீமைகளை இறையருட்துணையால் சங்கரிக்கவேண்டும்.

திருமால் சங்காரம் செய் செய்யப்பட்ட நரகாசூரன் ‘‘நான் இறக்கும் இத்தினத்தில் மக்களெல்லாம் நீராடிப் புத்தாடை அணிந்து மகிழ்ச்சியுடன் இருக்க அருளவேண்டும்’’ என்று வேண்டினான் திருமாலால் தன் இறுதியை அடைந்த அசுரன் மக்களெல்லாம் மகிழவேண்டும் என்று வேண்டினான் என்னால் திருமாலின் சக்கரத்தினாலும் திருமாலின் தரிசனத்தினாலும் அவன் எத்துணை அன்பும் தூய்மையும் அடைந்திருந்தான் என்பதை எல்லோரும் ஊகித்தறிய வேண்டும்.

- அருளாளன் -

அவ்வசுரனின் விருப்பப்படியே திருமால் தீபாவளிப் பண்டிகை உண்டாக அருளினார் என்கிறது கதை. தன் நினைவாக அமையக் கூடிய தினத்தில் மக்களெல்லாம் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என்று விரும்பியது போலவே நாமும் எல்லோரது மகிழ்ச்சியையும் விரும்புவது தீபாவளிப் பண்டிகை பொருத்தமான பண்பாகும்.

‘‘மானுடரே இப்புவியில் வாழும் மரங்களும் பிற உயிர்களும் உங்களைப்போல் பாடுபடுகின்றனவா? நீங்கள் அன்பு செய்வதே தொழிலாகக் கொண்டுவாழுங்கள். இயற்கை உங்களுக்கு உணவு கொடுக்கும் என்று பாடுவதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு எல்லா உயிர்களுக்கும் அன்பு செய்ய உரிய தினமாக தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடவேண்டும். நரகாசூரனின் தீக்குணங்கள் ஒளிந்த இத் தினத்தில் நாமும் ‘‘மடமை சிறுமை துன்பம் பொய் வருத்தம் நோவு மற்றிவை போல் கடமைநினைவுந்தொலைத்திங்கு (அன்பினால்) களியுற்றென்றும் வாழ்ந்திடுவோம்’’ என்ற பாரதி பாடலுக்கமைய அன்பினால் மகிழ்ச்சியுறுநாளாக தீபாவளிப் பண்டிகையை கொண்டாடுதலே நன்று.

(8-ம் பக்கம் பார்க்க)

## உய்வார் எல்லாரும் உவந்து!

விட்டுணுவும் மண்மகளும் விந்தையாய்ப் பெற்றசுதன்
துட்டநர காசுரன்முன் துஞ்சியநாள்-இட்டமுடன்
மண்டலம்வாழ் செந்தமிழர் மாண்புடனே யின்றெங்கும்
கொண்டாடு கின்றார் குறைந்து.

துட்டகொலை வன்செயல்கள் சொல்கொள்ளை அற்றொழிய
இட்டமொடு புத்தாடை இன்றணிந்து-மட்டில்புகழ்
தெய்வா லயம்போந்து தீபங் களையேற்றி
உய்வாரெல் லாரும் உவந்து.

—வெண்பாமணி முருகசூரியன்

## கருணையை உணர்த்தும் இந்நாள்

தீமைகள் மிகவாய்ச் செய்த
 தீயவன் வீழ்ந்த நன்னாள்!
தீமைகள் நிலைக்க மாட்டா
 தென்பதை உணர்த்தும் நன்னாள்!!
தீமைகள் பொங்கும் போதில்
 மாயவன் புவியில் வந்து
தீமைகள் களைந்து காக்கும்
 கருணையை உணர்த்தும் இந்நாள்!!

தீயென எம்மைத் தீய்க்கும்
 தீமைகள் போக்கும் வண்ணம்
தீமைகள் ஒழிந்து இன்பம்
 பொங்கிட அருளும் வண்ணம்
தீமைகள் செய்வோர் வாழ்வும்
 செம்மையாய் அமையும் வண்ணம்
தீபந் தெங்கள் கண்ணன்
 மலரடி போற்றி செய்வோம்!!

-‘முருகு’

அனைவருக்கும் மங்களகரமான
தீபாவளி நல்வாழ்த்துக்கள்
வடமாகாணத்தில் முதன் முதலாக
கலர்படச்சேவையை ஆரம்பித்து
ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு
**11-11-82 முதல் 20-11-82 வரை**
**சண்கோ கலர்ச் சேவை**
(குளிரூட்டப்பட்டது)
கே. கே. எஸ். றோட், சுன்னாகம்,
(யூனியனுக்கு அருகாமையில்)
ஸ்தாபனத்தார் வழங்கும்
**அரைச்சலார் !**
(போஸ்காட் அளவு கலர்ப்படம் ரூபா 10/- மட்டுமே)
படங்கள் யாவும் 5 நாட்களில் வழங்கப்படும்
அத்துடன், நீங்கள் எமது ஸ்தாபனத்தில் செய்யும் 24 படங்களுக்கு மேற்பட்ட ஒவ்வொரு பிலிம் சுருளுக்கும் புதிய பிலிம் சுருள் இனமாக வழங்கப்படும்.

வாடிக்கையாளர்களுக்கும்
ஆதரவாளர்களுக்கும் எமது
தீபாவளி நல் வாழ்த்துக்கள்

சகலவித எவர்சில்வர் பொருட்கள்
கோவில் உபகரணங்கள் மின் விசிறிகள்

**அல்ஃபா தயாரிப்புகள்**

கொழும்பு
**A. M. றஜீடீன் அன் சன்ஸ்**
ஸ்தாபனத்தாரின் இறக்குமதி செய்யப்பட்ட
★ குளியலறை
★ சமையலறை
உபகரணங்கள்

எம்மிடம் நிதான விலையில் கிடைக்கும்

# செந்தூரன் டிரேடிங் கம்பனி

313, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். தொலைபேசி 24139

அனைவருக்கும் அன்பு கலந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!
யாழ்ப்பாணத்தில் உங்களது
தேய்ந்துபோன டயர்களை புதுப்பிப்பதற்குச் சிறந்த இடம்

# நோர்தேண் இன்டஸ்றீஸ்

112, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்
போன்: 23158.

அனைவருக்கும் மங்களகரமான தீபாவளி வாழ்த்துக்கள் உரித்தாகுக!

உங்கள் சுபீட்சத்திற்கு வழிகாட்டி ✶ நம்பிக்கை ✶ நாணயம் ✶ அனுபவம்
முதட்லீடிற்கு இவை உத்தரவாதம்

# ஷப்ரு யூனிகோ பினான்ஸ் லிமிட்டெட்

நிதி ரீதியான உதவிகள்:
★ உங்களுக்கு வர்த்தக விவசாயத்துறையிலும், வாகனங்களையும் உபகரணங்களையும் கொள்வனவு செய்ய உதவும் விதமாகவும் வாடகை கொள்வனவு நிதி உதவி வழங்கியும்
★ வீடமைப்பு விவசாயம், கைத்தொழில், ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் ஆகியவற்றிற்கு நிதி ஏற்பாடு செய்து கொடுத்தும்,
★ நீங்கள் விற்கவிருக்கும் காணிகள், வீடு வளவுகள் ஆகியவற்றை எதுவித சிரமமின்றி நிதானமாக நல்ல விலைக்கு விற்றுத்தருவோம்.
★ ரி. வி. (கலர்), குளிர்சாதனப் பெட்டிகள். மின்விசிறிகள், மோட்டார் சைக்கிள் முதலியன உடன் விலைக்கும் அல்லது தவணைமுறை அடிப்படையிலும் பெற்றுக்கொள்ள வசதியுண்டு.

வேறும் தேவைகள் எதுவானாலும் எப்பொழுதும் கலந்து ஆலோசிக்க எம்மிடம் வாருங்கள்

**SHABRA UNICO FINANCE LTD.**

(இலங்கை மத்தியவங்கியின் அனுமதி பெற்ற ஸ்தாபனம்)

தலைமை அலுவலகம்:
61, நியூ புலர்ஸ் வீதி,
கொழும்பு - 4.
தொலைபேசி: 589310

யாழ்ப்பாண காரியாலயம்
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சிகரமான
தீபாவளி வாழ்த்துக்கள்
இறக்குமதி செய்யப்பட்ட
● பால்மா வகைகள் ● நூதன விளையாட்டுச் சாமான்கள் ● கோப்பை ● பீங்கான்–கிளாஸ் ● எனுமல் ● அலுமினியம் ● எவர்சில்வர் சாமான்களும் ● நெல்குற்றும் ● மாவு அரைக்கும் இயந்திரங்களும் அதன் உப உறுப்புக்கள் ● சுவர் மணிக்கூடுகள் ● கைக்கடிகாரங்கள் ● மின்சார மோட்டோர்கள் ● மின்சார விசிறிகள் ● மின்சார உபகரணங்கள் ● மற்றும் சில்லறைச் சாமான்களுக்கும் ● சுவைமிக்க பேபிமார்க் குளிர்பானங்களுக்கும்
இன்றே விஜயம் செய்யுங்கள்
ராஜு ஸ்ரோர்ஸ்
67, 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
போன்:22372 தந்தி: ராஜு

அன்பர்கள், ஆதரவாளர்கள், அனைவருக்கும்
எங்கள் இதயம் கலந்த
தீபாவளி நல் வாழ்த்துக்கள்!
வட இலங்கையில்
ஜப்பான் "நெஷனல்" நிறுவனம்
அங்கீகரித்த மிகப்பெரிய
"நெஷனல் T.V." விற்பனைநிலையம்
"V. K. இராசரத்தினம்
யாழ்ப்பாணம்"
என்ற பெருமையோடு தலைநிமிர்ந்து நின்று
அன்போடு வாழ்த்துக்களைப்
பகிர்ந்துகொள்கின்றது
"நெஷனல்" ரெலிவிஷன்களுக்கு
V. K. இராசரத்தினம்
95, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23447

# "இறவாமல் இருக்கவே பிறவாமல் இருக்க

உலகிலே பிறந்த உயிர்கள் அனைத்தும் பலப்பல எண்ணங்களுடன் வாழ்கின்றன. ஒரு தந்தைக்கு ஒருதாய் வயிற்றில் இரு மக்கள் பிறந்தன. ஒன்று தாய் தந்தையருக்கு அடங்குகின்றது. ஒன்று அடக்குகின்றது.

ஒரு தாய் வயிற்றில் பிறந்த மக்கள் குணம் வேறு, நடை வேறு, முகபாவங்கள் வேறு. நிறம் வேறு, திறம்வேறு. இவ்வாறு எல்லாவற்றிலுமே மாறுபாடுகளுடன் இருக்கின்றார்கள்.

தாய் கேகசி; தந்தை விச்சிரவசு. இவர்கட்கு பிறந்தவர்கள் இராவணன், கும்பகர்ணன், விபீஷணன், சூர்ப்பனகை என்பவர்கள்.

இந்த நால்வரும் வெவ்வேறு இயல்புகளையுடையவர்கள். இராவணன் மூர்க்கன்; கும்பகர்ணன் நல்லவன், ஆனால் முரடன்; விபீஷணர் பரமசாது. விபீஷணர் என்றபேர் சிவபெருமானுடைய ஆயிரம் நாமங்களில் ஒன்று. "பேராயிரம் பரவிவானோர் ஏத்தும் பெம்மானை" என்கின்றார் அப்பர் பெருமான்.

விபீஷணன்–பயம் இல்லாதவன். எல்லோருக்கும் மரணபயம் உண்டு. சிவபெருமான் காலனையுதைத்த காலகாலன். அவர் ஒருவர்தான் பயம் இல்லாதவர். சகஸ்ர நாமங்கள் மகாபாரதத்தில் அநுசாசன பர்வதத்திலே உபமந்யுமுனிவர் கண்ணபிரானுக்கு உபதேசித்தார் என வருகின்றது.

அடுத்து சூர்ப்பனகை. சூர்ப்பம்–முறம். முறம் போன்ற நகங்களையுடையவள். இவள் கணவனைத் தொட்டால் எத்துணை இங்கிதமாக இருக்கும்? கணவனைத் தொட்டால்அவன் உடம்பில் உதிரம் ஒழுகும். இன்னும் ஒருமுறை மனைவி தன்னைத் தொடுவாளா என்று அவன் எதிர்பார்ப்பானா? எப்போது தொட்டுவிடுவாளோ? என்று நடுங்கிக் கொண்டேயிருப்பான். சூர்ப்பனகையின் கணவன் வித்யுத்ஜிஷ்வா. விதிதையை நாவினால் யுத்தம் செய்து வென்றவன்.

சூர்ப்பனகை மிகவும் பொல்லாதவள். ஒரு வயிற்றில் பிறந்தவர்கள் இவ்வாறு குணங்களால் வேறுபடுகின்றார்கள். புகழ்பெற்ற இதிகாசத்தில் வரும் பாத்திரங்கள் இவர்கள். எல்லோருக்கும் நன்கு தெரிந்தவர்களைப் பற்றிக் கூறினால் உங்களுக்கு நன்கு புரியும் என்று இதனைக் கூறினேன்.

ஆதலால் ஒருவர் குணம் போல் ஒருவர் குணம் அமையாது. ஆன்மாக்கள் வெவ்வேறு இயல்புகளுடன் இருக்கின்றன.

ஆனால்; இப்போது நான் நான் சொல்லப்போகும் ஒன்றில் மட்டும் யாருக்கும் கருத்து வேற்றுமை கிடையாது. 'துன்பம் இன்றி இன்பத்துடன் வாழவேண்டும்'' என்றுதான் கருத்துவேற்றுமையின்றி எல்லோரும் எண்ணுகின்றார்கள்.

இந்துவோ, முஸ்லிமோ, கிறிஸ்தவரோ, அரசியல் வாதியோ, சமயவாதியோ, வடநாட்டினரோ, தென்னாட்டினரோ, ஆணோ, பெண்ணோ, முதியவரோ, இளைஞரோ, முந்தியிருந்தவரோ, இப்போதிருக்கின்றவரோ, இனி இருக்கப் போகின்றவரோ, எல்லோரும் துன்பமின்றி இன்பத்துடன் வாழவேண்டும் என்றுதான் எண்ணுகின்றார்கள் ஆனால் யாராவது துன்பமின்றி இன்பத்துடன் வாழ்கின்றார்களா? இல்லை. நமக்கு வரும் துன்பங்கள் ஒன்றா? இரண்டா? பலப்பல.

பல துன்ப முழன்று
கலங்கிய
சிறியன் புலையன்
கொலையன் புரி

பவமின்று–கூ
வந்த
என்கிறார் அருண
"அறம் பார
பவான் தினைந்
றார் பகவத்பாத
எள் வேண்டும்
வினைதப்பது போ
ரயில்வே நிலைய
க்கு டிக்கட்டு எடு
புரம் போகும் ர
போலும். இன்
என்று எண்ணு
துன்ப விதை த
துன்பவினை தா
எப்படி விளையும்

## திக்கெட்டும் கொண்டாடும் தீபாவளி

--எஸ். சி. எஸ். சிதம்பரநாதன்--

ஐப்பசி மாதத்தி லமைந்தவொரு
அமாவாசை யோடுவரு சதுர்த்தசியில்
இப்புவியில் இந்துக்கள் தீபாவளி
இனிதாகக் கொண்டாடல் வழமையது.

வழமையினை மாற்றிடுதல் நன்றன்று!
வறியவரும் நகையடைவு வைத்தேனும்
பழமையினைப் பின்பற்றித் துணிமணிகள்
பலவர்ணம் வாங்கிடுதல் புதுமையல்ல!

தீபவிழா என்றாலோ தீஞ்சுவைதான்
தித்திக்கும் தின்பண்டம் நினைவுவரும்
பாவவினை நீக்கவரு நன்னாநாய்
பக்குவமாய்க் கொண்டாட யாருளரோ?

இருளகற்றி ஒளியேற்றும் இன்ப விழா!
இன்னல்கள் துடைத்தெறியும் இனிய விழா!
திருமாலை மனதிருத்த உரிய வழி
திக்கெட்டும் கொண்டாடும் தீபாவளி.

## திருமு

"கடவுளே
தும் தப்ப
நினைக்கின்றே
இத்தனை துன்பப
கண்ணிருக்கின்ற
"நான் கஷ்டி
கின்றேன். மாதா
தோறும்
சென்று வழிபடு
படியிருந்தும் எ
மகன்! மாண்
உன்னை வணங்க
இனி கோயிலுக்
டேன்" என்று
தைச் சலித்துக்
கள் இது பேதை
ரயிலில் பய
போது, அவன் வ
ஷனில் அவனை
இறங்கினால், இ
லியில் இருக்கின்
மந்திரியைக் கு

ஒரு தாய்க்கு
வர்கள். ஆரோ
மூத்த புதல்வனு
2 தோசை, ஒரு
ஒரு குவளை நிரம்
தாள். இரண்டா
அரை உப்புப்போ
கஞ்சி தந்தாள்.
ரத்த சீதபேதி,
மகனுக்கு புனர்
தந்தாள். அவனு

நல்லெண்ணெ ராஜா
தனது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
தீபாவளி வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்கின்றார்!
உங்கள் சாப்பாட்டுக்கு
வி எஸ் பி லஞ்ச் ஒயிலை
பாவியுங்கள்!
V S P LUNCH OIL
வி எஸ் பி லஞ்ச் ஒயில்
எங்கும் பிரசித்தமானது - நம்பிக்கையானது!
ஏக விநியோகஸ்தர்கள்:
பரிமளா ஸ்டோர்ஸ்
மானிப்பாய்வீதி --- யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23224

அனைவருக்கும் அன்பு கலந்த
யாழ். நகரில் தரமான தங்கப்
ரூபி ஜுவல்லா

அனைவருக்கும் அன்பு கல
மீண்டும் யாழ் நகரில் து
யப்பான் கம்பனியாரின்
GENERAL COLOUR T.
(10 GY. ALLO
Nippon Booste
மிகவும் குறைந்த விலையில் சிறந்ததை வாங்கி இன்புறுங்
தெளிவான படத்திற்கும் திறமையான கலருக்கும்
ஜெனரல் கலர்
வடமாகாண ஏகவி
ரேடியோ மனுவல்

# வேண்டுமானல் வேண்டும்"

...ழிந்திட்
...ந்தருள் புரிவாயே
...ருணகிரிநாதர்.
...ாரதாதக்க
...பந்தோ?'' என்கின்
...ாதா ஆதிசங்கரர்
...டும் என்றுகொன்
...போலும். திருச்சி
...யத்தில் மதுரை
... எடுத்து விழுப்
...ம் ரயிலில் ஏறுவது
...இன்பம் வேண்டும்
...ணுகின்ற நாம்
... தூவுகின்றோம்.
... தூவினுல்இன்பம்
...யும்?

